28th July 1962]

பள்ளியில் போதனு மொழி.

* **752 கேள்வி.—திரு அ. பெ. தர்மலிங்கம் : கனம் நிதி அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் அல்லாத இதர மொழிகளைப் போதனுமொழியாகக் கொண்டுள்ள பள்ளிகள் எத்தனை ?

(இ) அவைகளில் தமிழ் போதனுமொழியாக எப்போதிருந்து அமுலாக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) High Schools about 60, Elementary Schools about 700.

(இ) There is no such proposal.

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : மாணவர்களும், பெற்றோர்களும், பொதுவாக இந்தத் தமிழ் நாட்டு மக்களிலே பெரும்பாலோர் ஆங்கிலம் மிகவும் அவசியம் என்று கருதுவதை சர்க்கார் உணர்ந்திருக்கிறார்களா ? எதிர்க் கட்சியினுடைய வீண் பிரசாரத்திற்கு பயந்து சர்க்கார் ஆங்கிலத்தை விட்டுவிடப் போகிறார்களோ என்று மக்கள் பயப்படுவதை சர்க்கார் உணர்ந் திருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலம் படிப்பதின் அவசி யத்தை மக்கள் பொதுவாக உணர்ந்திருக்கிறார்கள். அரசாங்கமும் அதை உணர்ந்து தான் பிரிட்டிஷ் கவுன்சில் ஒத்துழைப்பைக் கொண்டு பிரத்தியேகமாக ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டது போல், ரஷ்யாவில் கூட 100-க்கு 60 விதம் சிறிய வயதிலேயே மாணவர்களுக்கு ஆங்கிலம் கட்டாய மொழியாக சொல்லிக் கொடுக்கப்படுகிறது. மேலும், இந்தியை நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால், இந்த நாட்டில் ஒருமைப்பாடு உணர்ச்சி பெருகவேண்டுமென்றால், அது தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய ஒரு நிலைமையில் ஆங்கிலம் மூலம்தான் பெருகக்கூடும் என்பதையும் நாம் உணர வேண்டியிருக்கிறது.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : இதர மொழிகளைப் போதனு மொழியாகக் கொண்டுள்ள பள்ளிகளில் தாய்மொழி தமிழாக உள்ள மாணவ, மாணவிகள் படிக்கிறார்களா ? அல்லது இதர மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டும் படிக் கிறார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு வேறு மொழி போதனு மொழி. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர்களுக்குத் தான் தமிழ் போதனு மொழி.

•

திரு. பு. கார்ச்சா கவுடர் : இந்தக் கல்வி ஆண்டிலே 6-வது வகுப்பிலே ஆங்கிலத்தை போதனு மொழியாக கொண்டுவர வேண்டும் என்று எத்தனை தனியார் உயர்நிலை பள்ளிகளிலிருந்து

[28th July 1962

விண்ணப்பித்துக் கொண்டிருந்தார்கள்? அப்படி விண்ணப்பித்த எல்லா ஹைஸ்கூல்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது குறிப்பிட்ட சில பள்ளிகளுக்கு மட்டும் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா, மற்றவர்களுக்குக் கொடுக்கவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது நடைமுறையில் இருப்பது நான்காவது ஸ்டாண்டர்டிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்பது. ஆகையினால், கனம் அங்கத்தினர் அவர்களுடைய கேள்வி எனக்குப் புரியவில்லை.

திரு. வை. சங்கரன்: தமிழ் தாய் மொழியில்லாத மாணவ மாணவிகளைக் கொண்ட ஸ்கூல்களில் தமிழ் அல்லாத இதர மொழிகளை போதனா மொழியாகக் கொள்ளுவதற்கு அரசாங்கம் வசதிகள் அளிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: நான் முன்பே கூறினேன். வேறு மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்களுக்கு அவர்களுடைய மொழியில் போதனா மொழி இருப்பதற்கு வசதி அளிக்க வேண்டியிருக்கிறது.

Red hills and Cholavaram lakes

* **753 Q.**—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Health be pleased to State:—

(*a*) the present stage of the proposal to construct a conduit from Poondi to Red hills;

(*b*) the proposal to acquire the irrigation rights of ayacutdars of the Red hills and Cholavaram lakes; and

(*c*) the total expenditure to be incurred in respect of the proposals mentioned in clauses (*a*) and (*b*) above, for the year **1961-62**?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) The Government have agreed to have an open lined channel and the Commissioner, Corporation of Madras has been asked to prepare detailed plans and estimates and submit them to Government for administrative approval.

(*b*) Orders have been issued on 13th June 1962 to acquire the entire lands led by Red Hills and Cholavaram tanks.

(*c*) The total expenditure incurred in 1961–62 in respect of (*a*) construction of conduit from Poondi to Red Hills—Rs. 30,177 and (*b*) acquisition of irrigation rights of ayacutdars of the Red Hills and Cholavaram lakes—Rs. Nil.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விவசாயிகளுடைய பாசன உரிமையை மட்டும் அரசாங்கம் வாங்கிக்கொள்ளுவதால், அவர்களுக்கு நிலம் இருப்பதினால் மட்டும் பிரயோசனம் இல்லை. அவர்